OL/2025(2026)/45/T-I,II

සියලු ම හිමිකම් ඇවිරිණි /முழுப் பதிப்புரிமையுடையது /All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka Department of Examinations, Sri Lanka

**ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව**
**இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்**
**Department of Examinations, Sri Lanka**

**45 T I, II**

**අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (සාමාන්‍ය පෙළ) විභාගය, 2025(2026)**
**கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர)ப் பரீட்சை, 2025(2026)**
**General Certificate of Education (Ord. Level) Examination, 2025(2026)**

| | |
|---|---|
| භරත නැටුම් I, II | පැය තුනයි |
| பரதநாட்டியம் I, II | மூன்று மணித்தியாலம் |
| Bharatha Dancing I, II | *Three hours* |

අමතර කියවීම් කාලය - මිනිත්තු 10 යි
மேலதிக வாசிப்பு நேரம் - 10 நிமிடங்கள்
Additional Reading Time - 10 minutes

**வினாத்தாளை வாசித்து, வினாக்களைத் தெரிவு செய்வதற்கும் விடை எழுதும்போது முன்னுரிமை வழங்கும் வினாக்களை ஒழுங்கமைத்துக் கொள்வதற்கும் மேலதிக வாசிப்பு நேரத்தைப் பயன்படுத்துக.**

## பரதநாட்டியம் I

**அறிவுறுத்தல்கள் :**

- ✳ **எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக.**
- ✳ **1 தொடக்கம் 40 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் (1), (2), (3), (4) என இலக்கமிடப்பட்ட விடைகளில் சரியான அல்லது மிகப் பொருத்தமான விடையைத் தெரிவுசெய்க.**
- ✳ **உமக்கு வழங்கப்பட்டுள்ள விடைத்தாளில் ஒவ்வொரு வினாவுக்கும் உரிய வட்டங்களில் உமது விடையின் இலக்கத்தை ஒத்த வட்டத்தினுள்ளே புள்ளடியை (×) இடுக.**
- ✳ அவ்விடைத்தாளின் மறுபக்கத்தில் தரப்பட்டுள்ள மற்றைய அறிவுறுத்தல்களையும் கவனமாக வாசித்து, அவற்றைப் பின்பற்றுக.

**1.** பிரம்மாவிடம் நாட்டிய வேதத்தினைக் கற்றவர் யார்?
(1) உஷை (2) உமாதேவியார் (3) பாணாசுரன் (4) பரதர்

**2.** சமநிலைபேணி ஆடப்படும் கிராமிய நடனம்
(1) கும்மி (2) கரகம் (3) காவடி (4) கோலாட்டம்

**3.** 'பல்லக்கு' என்பதனை அபிநயிக்கப் பிரயோகிக்கும் ஸம்யுத ஹஸ்தம்
(1) கட்வா (2) கடகாவர்த்தனம் (3) சுவஸ்திகம் (4) உத்ஸங்கம்

**4.** "கண்ணன் வெண்ணெய் திருடித் தின்ன..." என்ற பாடலில் வெண்ணெய் திருடித் தின்பதனை அபிநயிப்பதற்குப் பிரயோகிக்கும் ஹஸ்தங்கள்
(1) இடது கை - சதுரம் : வலது கை - சிலிட்ட காங்கூலம்
(2) இடது கை - அலபத்மம் : வலது கை - அராளம்
(3) இடது கை - அலபத்மம் : வலது கை - சிலிட்ட காங்கூலம்
(4) இடது கை - பத்மகோஷம் : வலது கை - சுகதுண்டம்

**5.** தூய நிருத்த வகையைச் சார்ந்த உருப்படி யாது?
(1) சப்தம் (2) அலாரிப்பு (3) பதம் (4) வர்ணம்

**6.** ஓமம் வளர்த்தல், முயல், யானை, தர்ப்பைப்புல் போன்றவற்றைக் காண்பிப்பதற்குப் பயன்படுத்தப்படும் அஸம்யுத ஹஸ்தம்
(1) கடகாமுகம் (2) மிருகசீர்ஷம் (3) சதுரம் (4) சிம்மமுகம்

**7.** I₉I₉OO என்ற குறியீடு குறிக்கும் தாளம் யாது?
(1) சங்கீர்ணஜாதி துருவதாளம் (2) சங்கீர்ணஜாதி மட்டியதாளம்
(3) சங்கீர்ணஜாதி அடதாளம் (4) சங்கீர்ணஜாதி திரிபுடைதாளம்

**8.** மேலே உள்ள பொருட்களைப் பார்ப்பதற்குப் பிரயோகிக்கும் சிரோ, திருஷ்டி பேதங்கள் முறையே
(1) உத்வாகிதம், உல்லோகிதம் (2) உல்லோகிதம், உத்வாகிதம்
(3) அதோமுகம், அவலோகிதம் (4) அவலோகிதம், அதோமுகம்

**9.** நர்த்தகியின் பகிப்பிராணன்களில் ஒன்று
(1) ஆர்வம் (2) கீதம் (3) வேகம் (4) சோகம்

[பக். 2 ஐப் பார்க்க

**10.** ; ; ; தாம் ; தஜ், ஜொணு ; என்பதிலுள்ள மொத்த மாத்திரைகள் எத்தனை?
(1) 10 (2) 12 (3) 14 (4) 16

**11.** சிவபெருமான் கையில் முழங்கும் தோற்கருவி
(1) பேருடுக்கை (2) மத்தளம் (3) சிற்றுடுக்கை (4) கெஞ்சிரா

**12.** சொற்கட்டுக்களை மையமாகக் கொண்டு இயற்றப்படும் உருப்படி
(1) தில்லானா (2) ஸ்லோகம் (3) வர்ணம் (4) ஜதீஸ்வரம்

**13.** 'பகே' என்பதன் பொருள் யாது?
(1) சேவல் (2) காகம் (3) கொக்கு (4) ஒட்டகம்

**14.** மிருதங்கச் சொற்கட்டின் தீர்மானம் எவ்வாறு அழைக்கப்படும்?
(1) தாள ஆதரவு (2) மோரா (3) ஜதி (4) தனி ஆவர்த்தனம்

**15.** 35 தாளச் சக்கரத்தில் மிகக் குறைந்த எண்ணிக்கையையும் கூடிய எண்ணிக்கையையும் கொண்ட தாளங்கள் முறையே
(1) சங்கீர்ணஜாதி துருவதாளம், திஸ்ரஜாதி ஏகதாளம்
(2) மிஸ்ரஜாதி துருவதாளம், திஸ்ரஜாதி ரூபகதாளம்
(3) சதுஸ்ரஜாதி அடதாளம், திஸ்ரஜாதி அடதாளம்
(4) திஸ்ரஜாதி ஏகதாளம், சங்கீர்ணஜாதி துருவதாளம்

**16.** மிகைப்படுத்தல் இல்லாமல் அரங்கில் பாத்திரங்களின் இயல்பான நடத்தையை வெளிப்படுத்துவது
(1) நவரஸம் (2) நாட்டியதர்மி (3) லோகதர்மி (4) நாடகம்

**17.** சித்தன்னவாசல் ஓவியம் சிறப்பாக வரையப்பட்ட காலப்பகுதி
(1) சங்ககாலம் (2) சங்கமருவியகாலம்
(3) சோழர்காலம் (4) பல்லவர்காலம்

**18.** இடது கையில் சிகரமும் வலது கையில் கர்த்தரீமுகமும் பிரயோகித்துக் காண்பிக்கப்படும் பாந்தவ்ய ஹஸ்தம்
(1) தாய் (2) தந்தை (3) மைத்துனன் (4) மைத்துனி

**19.** கண்டிய நடனத்தில் கௌதம புத்தரைப் போற்றிப் புகழ்ந்து ஆடப்படுவது
(1) ஈரடி வண்ணம் (2) சவுளா வண்ணம்
(3) மயூர வண்ணம் (4) அஸத்ருஸ வண்ணம்

**20.** நிருத்தி என்பதனை அபிநயிக்கப் பிரயோகிக்கும் ஹஸ்தங்கள் முறையே
(1) இடது கை - கட்வா : வலது கை - சகடம்
(2) இடது கை - சகடம் : வலது கை - சதுரம்
(3) இடது கை - அராளம் : வலது கை - கட்வா
(4) இடது கை - பிரம்மரம் : வலது கை - சதுரம்

**21.** ஹாஸ்ய ரஸத்தின் ஸ்தாயி பாவம்
(1) யுகுப்ஸா (2) விஷ்மய (3) ஹாஸ (4) ரதி

**22.** ஆனந்த தாண்டவம் ஆடப்பட்ட இடம், சபை என்பவற்றை முறையே கொண்ட தெரிவு யாது?
(1) திருவாலங்காடு, கனகசபை (2) சிதம்பரம், கனகசபை
(3) சிதம்பரம், சித்திரசபை (4) திருவாலங்காடு, சித்திரசபை

**23.** பின்வரும் பாடல்களுள் தொழில்சார் பாடலாக **அமையாதது** எது?
(1) "புறப்படுவோமே மச்சான்..." (2) "கொழுந்து கொய்வோமே..."
(3) "அரிவி வெட்டப் போறேன்..." (4) "கோல்களை அடித்து ஆடுங்கடி..."

**24.** கரணங்களும் அங்ககாரங்களும் **இல்லாத** பூர்வரங்கம்
(1) சுத்த பூர்வரங்கம் (2) சித்திர பூர்வரங்கம்
(3) சம்பூர்ண பூர்வரங்கம் (4) உத்தர பூர்வரங்கம்

**25.** தாளத்தில் **பாடாது** கவிதைகளை இராகமாக நீட்டிப் பாடுவது
(1) தில்லானா (2) ஸ்லோகம் (3) ஜாவளி (4) பதம்

**26.** 'தளாங்குதொம்' எவ்வகை பாத பேதத்தில் அமைந்துள்ளது?
(1) உத்ப்ளவனம் (2) பிரம்மரி (3) சாரி (4) ஸ்தானகம்

[பக். 3 ஐப் பார்க்க

අ.පො.ස සාමාන්‍ය පෙළ සියලුම විෂයන්ට අදාළ ප්‍රශ්න පත්‍ර/පිළිතුරු පත්‍ර/සටහන් ලබා ගැනීමට Past Papers Wiki වෙත පිවිසෙන්න

**27.** துருவதாளத்தின் இறுதியில் லகுவினை நீக்கினால் உண்டாகும் தாளம் யாது?
(1) ரூபகதாளம் (2) திரிபுடைதாளம் (3) ஏகதாளம் (4) மட்டியதாளம்

**28.** 'இசைப் பேரறிஞர்' என்னும் விருதுப்பெயரினைப் பெற்றவர் யார்?
(1) க. பொன்னையாபிள்ளை (2) சு. சிவானந்தம்
(3) வழுவூர் இராமையாபிள்ளை (4) சு. வடிவேலு

**29.** மலையகத்தில் ஆடப்படும் கூத்து
(1) அர்ச்சுனன் தபசு (2) வாசாப்புக் கூத்து (3) தெம்மாங்கு (4) தென்மோடி

**30.** பின்வரும் 'அ' நிரலில் ஆடல் வகைகள் சிலவும் 'ஆ' நிரலில் அதற்குரிய இறைவனின் பெயர்களும் ஒழுங்கின்றித் தரப்பட்டுள்ளன.

| 'அ' | 'ஆ' |
|---|---|
| (i) அல்லியம் | A - கிருஷ்ணன் |
| (ii) கடைச்சியர் | B - சிவன் |
| (iii) கொடுகொட்டி | C - திருமால் |
| (iv) பாண்டரங்கம் | D - இந்திராணி |

இங்கு 'அ' நிரலின் ஒழுங்குக்கேற்ப 'ஆ' நிரல் ஒழுங்குபடுத்தப்பட்டுள்ள தெரிவு யாது?
(1) A, C, B, D (2) B, C, D, A (3) C, B, D, A (4) C, D, B, A

- பின்வரும் கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு **31, 32** ஆகிய வினாக்களுக்கு மிகப் பொருத்தமான விடைகளைத் தெரிவுசெய்க.

A - தாண்டவம், லாஸ்யம் என இரு பகுதிகளைக் கொண்டது.
B - அதிபங்கநிலை அசைதலைக் கொண்டது.
C - நன்கு அமைக்கப்பட்ட நடனக்கோலங்கள் சங்கீர்த்தனம் என அழைக்கப்பட்டது.
D - திரிபங்கநிலை அசைதலைக் கொண்டது.
E - சிருங்கார ரஸத்தையும் லாஸ்யத்தையும் முக்கிய பகுதிகளாகக் கொண்டது.

**31.** மேற்படி கூற்றுக்களில் மோகினி நடனத்துடன் தொடர்புடைய கூற்றுக்கள் யாவை?
(1) A, C (2) B, D (3) B, E (4) C, E

**32.** ஒடிசி நடனத்துடன் தொடர்புடைய கூற்றுக்கள் யாவை?
(1) A, B (2) A, C (3) A, D (4) C, E

- கீழே தரப்பட்டுள்ள அட்டவணையைக் கருத்திற்கொண்டு **33** தொடக்கம் **35** வரையான ஒவ்வொரு வினாவிற்குமுரிய மிகப் பொருத்தமான விடையைத் தெரிவுசெய்க.

| கருவி | மறுபெயர் | கலைஞர் |
|---|---|---|
| A | தண்ணுமை | B |
| புல்லாங்குழல் | C | டி. ஆர். மகாலிங்கம் |
| வீணை | D | E |

**33.** A, B ஆகிய இடைவெளிகளுக்குப் பொருத்தமான தெரிவுகள் யாவை?
(1) வயலின், கிருஷ்ணய்யர் (2) மிருதங்கம், நாராயணசாமி அப்பா
(3) வயலின், மகாலிங்கம் (4) மிருதங்கம், தனதாம்பாள்

**34.** C என்ற இடைவெளிக்குப் பொருத்தமான தெரிவு யாது?
(1) சங்கீத அளவுகோல் (2) உறுமி (3) வங்கியம் (4) மங்கலவாத்தியம்

**35.** D, E ஆகிய இடைவெளிகளுக்குப் பொருத்தமான தெரிவுகள் யாவை?
(1) பாரி, சந்திரமகாராஜ் (2) வீணா, சித்தேந்திரயோகி
(3) திமிரி, சிட்டிபாபு (4) சகலவாத்தியம், சிட்டிபாபு

[பக். 4 ஐப் பார்க்க


● **36** தொடக்கம் **40** வரையான வினாக்கள் ஒவ்வொன்றிலும் தரப்பட்டுள்ள படத்தினை அடிப்படையாகக் கொண்டு பொருத்தமான விடையினைத் தெரிவுசெய்க.

**36.** படத்தில் காட்டப்பட்டுள்ள தூக்கிய திருவடி குறிக்கும் தொழில் யாது?



(1) படைத்தல்
(2) காத்தல்
(3) அருளல்
(4) மறைத்தல்

**37.** படத்தில் காட்டப்பட்டுள்ள தோற்கருவி யாது?



(1) தப்பு
(2) தவில்
(3) மிருதங்கம்
(4) உடுக்கு

**38.** படத்தில் காட்டப்பட்டுள்ள ஹஸ்தம் யாது?



(1) வராகம்
(2) கர்த்தரிமுகம்
(3) மிருகசீர்ஷம்
(4) கர்த்தரீஸ்வஸ்திகம்

**39.** படத்தில் காட்டப்பட்டுள்ளவரை அபிநயிக்கப் பிரயோகிக்கும் ஹஸ்தங்கள் யாவை?



(1) இடது கை - சந்திரகலா : வலது கை - சிம்மமுகம்
(2) இடது கை - தாம்ரசூடம் : வலது கை - திரிசூலம்
(3) இடது கை - தாம்ரசூடம் : வலது கை - சூசி
(4) இடது கை - சந்திரகலா : வலது கை - திரிசூலம்

**40.** படத்தில் காட்டப்பட்டுள்ள ரஸத்திற்குப் பொருத்தமான அனுபாவமாக அமைவது யாது?



(1) வசந்த காலங்கள்
(2) புருவங்களை அசைத்தல்
(3) மலர்மாலைகள்
(4) மயிர் சிலிர்த்தல்

PAST PAPERS WIKI

**

[பக். 5 ஐப் பார்க்க

අ.පො.ස සාමාන්‍ය පෙළ සියලුම විෂයන්ට අදාල ප්‍රශ්න පත්‍ර/පිළිතුරු පත්‍ර/සටහන් ලබා ගැනීමට Past Papers Wiki වෙත පිවිසෙන්න

Past Papers Wiki



සියලු ම හිමිකම් ඇවිරිණි/முழுப் பதிப்புரிமையுடையது/All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

45 T I, II

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (සාමාන්‍ය පෙළ) විභාගය, 2025(2026)
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர)ப் பரீட்சை, 2025(2026)
General Certificate of Education (Ord. Level) Examination, 2025(2026)

භරත නැටුම් I, II
பரதநாட்டியம் I, II
Bharatha Dancing I, II

## பரதநாட்டியம் II

✳ முதலாம் வினாவையும் வேறு நான்கு வினாக்களையும் தெரிவு செய்து, எல்லாமாக ஐந்து வினாக்களுக்கு மாத்திரம் விடை எழுதுக.

✳ ஒவ்வொரு வினாவிற்கும் 12 புள்ளிகள் உரித்தாகும்.

**1.** பின்வரும் வினாக்களுக்குச் சுருக்கமான விடை எழுதுக.

(i) திரியாங்கங்களைக் குறிக்கும் தாளம் எது?

(ii) அலாரிப்பின் நாட்டிய அமைப்பு எந்த நிறுவனத்திற்குரியது?

(iii) பல்லவர் காலத்தில் நந்திவர்மனைப் பற்றி எழுந்த நூல் எது?

(iv) பஞ்சரத்தினக் கீர்த்தனைகளிற்கு முதன்முதலில் நடனம் அமைத்தவர் யார்?

(v) பாத்திரப் பிராணனில் 'சிரத்தா' என்பதன் கருத்து யாது?

(vi) வடமோடி, தென்மோடிக் கூத்துக்களில் முழுப்பாடலுமே இரட்டித்துப் பாடப்படும் கூத்து எது?

(vii) சுருதிக்காக தனியே தந்திகள் **பொருத்தப்படாத** வாத்தியம் எவ்வாறு அழைக்கப்படும்?

(viii) 'ஸ்வரபல்லவி' என அழைக்கப்படும் உருப்படி யாது?

(ix) வர்ணத்தின் உத்தராங்கத்தில் இடம்பெறும் **இரண்டு** பகுதிகளையும் தருக.

(x) நடனம் ஆடுவதற்கென தனித்தனி அரங்கங்கள் இருந்ததாகக் குறிப்பிடும் காப்பிய நூல்கள் **இரண்டு** தருக.

**2.** (i) பரதநாட்டிய சம்பிரதாய நாட்டிய நிகழ்ச்சி நிரலில் இடம்பெறும் முதல் **நான்கு** உருப்படிகளையும் ஒழுங்குமுறையாக எழுதுக.

(ii) மேலே (i) இல் குறிப்பிட்ட உருப்படிகளுள் முதன்முதலில் பாவத்தை வெளிப்படுத்தும் நிருத்திய உருப்படியினைக் குறிப்பிட்டு, சுருக்கமாக விளக்குக.

(iii) மேலே (ii) இல் குறிப்பிட்ட நிருத்திய உருப்படியின் இரண்டாவது கண்டிகையின் இராகம், தாளம் என்பவற்றைக் குறிப்பிட்டு, அதன் சாகித்தியத்தினை இசைக் குறியீட்டுடன் எழுதுக.

**3.** (i) 'தென்கைலாயமலை' என கல்வெட்டுக்களில் குறிப்பிடப்பட்டுள்ள ஆலயம் நிர்மாணிக்கப்பட்ட காலப்பகுதியையும், அதனை நிர்மாணித்த மன்னனின் பெயரையும் குறிப்பிடுக.

(ii) மேலே (i) இல் குறிப்பிட்ட மன்னனின் விருதுப்பெயர்கள் **நான்கினைக்** குறிப்பிடுக.

(iii) மேலே (i) இல் குறிப்பிட்ட ஆலயத்தின் சிறப்பம்சங்கள் **ஆறினை** விவரிக்குக.

[பக். 6 ஐப் பார்க்க

**4.** பின்வரும் ஹஸ்தங்களுக்குரிய விநியோகங்களை ஸ்லோகத்துடனும் அதன் கருத்துடனும் எழுதுக.

(i) பிரம்மரம்

(ii) கர்க்கடகம்

(iii) மத்ஸயம்

**5.** (i) சங்ககாலப் பகுதியினை வரையறை செய்க.

(ii) வேத்தியல், பொதுவியல் என்ற இருவகை ஆடல்களுள் பொதுவியல் பற்றிச் சுருக்கமாக விளக்குக.

(iii) சங்ககால நடனக் கலையின் சிறப்புக்கள் பற்றி பின்வரும் அம்சங்களின் அடிப்படையில் விளக்குக.

- ஆடலுக்குரிய மறுபெயர்கள்
- நடன அரங்குகள்
- பண்கள்
- இலக்கிய நூல்கள்
- நடனக் கலைஞர்கள்
- இசைக் கருவிகள்

**6.** (i) “கிருஷ்ணா நீ பேகனே பாரோ...” என்ற பாடலைப் பாடியவரையும் இப்பாடலில் வெளிப்படுத்தப்படும் பாவத்தினையும் குறிப்பிடுக.

(ii) அவதாரம் பற்றிச் சுருக்கமாக விளக்குக.

(iii) எவையேனும் **ஆறு** அவதாரங்களைக் குறிப்பிட்டு, அவ் அவதாரம் ஒவ்வொன்றும் எடுக்கப்பட்ட சந்தர்ப்பத்தையும் அவற்றிற்கான பிரயோக ஹஸ்தங்களையும் எழுதுக.

**7.** பின்வருவனவற்றிற்குச் சிறுகுறிப்பு எழுதுக.

(i) எடுப்பு

(ii) அஷ்டபதி

(iii) மீனவ நடனம்

***

අ.පො.ස සාමාන්‍ය පෙළ සියලුම විෂයන්ට අදාල ප්‍රශ්න පත්‍ර/පිළිතුරු පත්‍ර/සටහන් ලබා ගැනීමට Past Papers Wiki වෙත පිවිසෙන්න